# குடும்பத் தினக் கொண்டாட்டங்கள்

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 15-3-2015 அன்று, காலை 10 மணி முதல், மாலை 6 மணி வரை, "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் (EAST COAST PARK) கிழக்கு கடற்கரைப் பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது.

ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி, மணலில் வீடுகட்டும் போட்டி, பெற்றோர்களுக்கான போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இக்குடும்பதின நிகழ்ச்சியில், சுமார் 200 பேர் கலந்து சிறப்பித்தனர்.